கும் பணி நிறைவேற்றப்பட்டு வருகிறது. தொடக்க இடப்பணிகள், நீர்ப் பகிர்வு ஏற்பாடு ஆகியவை குறித்த மதிப்பீடு தமிழ்நாடு குடிநீர் வழங்கு, கழிவு நீர் அகற்று வாரியத் தலைமைப் பொறியாளரின் ஆய்வில் உள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: எந்த இடத்திலிருந்து குடிநீர் கொண்டு வருவதற்கு தற்போது திட்டமிடப்பட்டுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: புளியஞ்சோலைக்கு அருகில் உள்ள கொல்லிமலையில் தோன்றும் ஐயாறு என்னும் ஆற்றிலிருந்து தண்ணீர் பெறப்படும்.

* 329. Q.—Thiru SOWDI S. SUNDARA BHARATHY : Will the Hon. the Chief Minister be pleased to state the date on which the drinking water supply scheme for Aruppukkottai will be completed ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அருப்புக்கோட்டை குடிநீர்த் திட்டத்தின் கீழ் எல்லா வேலைகளும் முடிவடைந்து 1973-ம் ஆண்டு மார்ச்சு இறுதியிலிருந்து முறையான குடிநீர் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: இந்தத் திட்டத்தில் எல்லா வார்ட் களுக்கும் முதலிலேயே தண்ணீர் சப்ளை செய்வதாகயிருக்கிறதா ? அல்லது ஃபையர் சர்வீஸ் ஸ்கீம் போல் குறிப்பிட்ட இடங்களில் சப்ளை செய்யக்கூடிய அளவில் முதலில் நிறைவேற்றுவதாக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: வார்ட்களைப் பற்றிய விவரம் இல்லை. ஆனால் ஒரு நாளைக்கு 13 லட்சம் காலன் தண்ணீர் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக 1996-ல் எதிர்பார்க்கப்படும் அருப்புக்கோட்டை நகர மக்கள் 80,000 என்று கணக்கிடப்பட்டு வழியி லுள்ள சிற்றூர் மக்கள் 20,000 என்று கணக்கிடப்பட்டு, இதனால் அவர்கள் பயனடைவார்கள் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. அருப்புக் கோட்டை நகரம் தவிர வழியில் பயன் பெறும் சிற்றூர்கள்:

புல்வைக்கரை.

மடக்கான்குளம்,

சிறுகுளம்,

கரிதான்குளம், செட்டிகுளம்,

காட்டான்குடி,

கோவல்குளம், கொளத்துப்பட்டி,

பாளையம்பட்டி

ஆகிய இடங்களுக்கும் இந்தத் தண்ணீர் பயன்படுத்தப்படும்.

திரு. த. சோணையா : இந்த அருப்புக்கோட்டைக்குத் தண்ணீர்கொண்டு போகிற திட்டம் திருப்புவனத்தில் வைகை ஆற்றிலிருந்துதான் தண்ணீர் எடுக்கப்படுகிறது. ஆனால் இடையில் இருக்கிற சிற்றூர்களுக்கெல்லாம் தண்ணீர் கிடைக்கும் என்று முதல் அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். எங்கு தண்ணீர் எடுக்கிறார்களோ அந்த திருப்புவனத்தில் இந்தத் தண்ணீர் வருவதாகத் தெரியவில்லை. ஆகவே அங்கும் தண்ணீர் வர உடனடியாக ஏற்பாடு செய்வார்களா ? என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சில நேரங்களில் அனைவருக்கும் ஒளி தருகிற விளக்கு அதற்குக் கீழ் இருட்டைத்தான் பெற்றிருக்கிறது. அதேபோல் திருப்புவனம் நிலை இருக்கும் என்று கருதுகிறேன். முடிந்தால் ஆராயப்படும்.

பிற மாநிலப் பரிசுச் சீட்டுகள்.

*330. வினா—திரு. என். டென்னிஸ் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிற மாநிலங்களின் பரிசுச் சீட்டுகள் தமிழ்நாட்டில் விற்கப்படுவது தடை செய்யப்பட்டுள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) பிற மாநிலப் பரிசுச் சீட்டுகளின் போட்டியைத் தவிர்க்கவும் அப்பரிசுச் சீட்டுகள் நமது மாநிலத்தில் வந்து குவிவதைத் தடுக்கவும் இத்தடை விதிக்கப்பட்டுள்ளது. 23-12-1971 நாளிட்ட நிதித்துறையின் (பரிசுச் சீட்டுகள் பிரிவில்) வெளியான அரசு ஆணை எண் 180-ல் பிற மாநிலப் பரிசுச் சீட்டுகள் தமிழ் நாட்டிற்குள் விற்கப்படுவதற்கு 1-1-1972 முதற்கொண்டு தடை விதிக்கப்படுமென உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த ஆணையை எதிர்த்து, திரு. எச். தவ்தம் சந்த் ஜெயின் என்பவரால் உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. 1-1-1972 முதற்கொண்டு பிற மாநிலப் பரிசுச் சீட்டுகள் தமிழ் நாட்டிற்குள் விற்கப்படுவதைத் தடை செய்யும் 23-12-1971 நாளிட்ட 180-ம் எண்ணுள்ள அரசு ஆணை செயல்படுவது, உயர்நீதி மன்றத்தில் விசாரணையிலுள்ள 3457/1971 எண் ரிட் மனுவின் மீது முடிவெடுக்கப்படுகிற வரையில் நிறுத்தி வைக்கப்பட வேண்டும் என்று உயர்நீதி மன்றம் ஆணையிட்டது.

திரு. என். டென்னிஸ் : வெளி மாநில பரிசுச் சீட்டுகள் தமிழ்நாட்டில் விற்கப்படுகிற காரணத்தினால் தமிழ்நாடு பரிசுச் சீட்டுக்கள் விற்பனை பெருமளவில் மந்தமடைந்திருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதுவும் ஓரளவு காரணம் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன்.